அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

விளம்பி ஆண்டு பங்குனி–சித்திரை ஏப்ரல் 2019 முரசு 12 ஒலி 142



பிரதி ஒன்றுக்கு ரூ. 10/– ஆண்டு சந்தா ரூ. 120/–

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தின் இயற்கைச் சூழலில் மூன்று நாட்கள்..

அன்பு... அருள்... ஆனந்தம்... உணர்த்தும்

# ஆழ்நிலை தியான முகாம்



இந்த பயிற்சி முகாமில்...

- ஆழ்நிலை தியானம்
- மௌனம்
- பக்தி
- யோகாசனம்
- பிராணாயாமம்
- மூலிகைக் குறிப்புகள்
- சத்சங்கம்

போன்றவை கற்றுத் தரப்படும்.

**மே 03, 04 & 05 2019**

வெள்ளி, சனி & ஞாயிறு... மூன்று நாட்கள் முழுவதும்...

**இடம்: வள்ளலார் சத்திய யோக சாலை,**
பெருமாள் மலை அடிவாரம்,
அர்த்தநாரிபாளையம்,
பொள்ளாச்சி.

**முன்பதிவிற்கு: 8838540176, 8940396760**

## பயிற்சியில் கலந்துகொள்ளும் அன்பர்கள் கவனத்திற்கு

1. பயிற்சியில் கலந்துகொள்வோர் மே 02 – ஆம் தேதி வியாழன் இரவிற்குள் வந்துவிட வேண்டும். சிறுவர்கள் அனுமதியில்லை.
2. 17 வயதிற்கு மேல் உள்ளவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
3. டார்ச் லைட், தண்ணீர் பாட்டில், ஏர் பில்லோ எடுத்து வரவும்.
4. அன்பர்கள் 3 நாட்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களோடு படுப்பதற்கும், யோகா செய்வதற்கும் 2 பெட்ஷீட், அணிவதற்கு ஆண்கள்: டீ.ஷர்ட், ஃபுல் பேண்ட்ஸ். பெண்கள்: சுடிதார் போன்ற வசதியான ஆடைகளை எடுத்துவரவும். குறிப்பு எடுக்க நோட்டு பேனா எடுத்து வரவும்.
5. பயிற்சியில் மூன்று நாட்கள் முழுவதும் கலந்துகொள்ள வேண்டும். மே 05 ஞாயிறு மாலை 5 மணிக்கு முகாம் முடிந்துவிடும்.

**பஸ் ரூட்:** பொள்ளாச்சியிலிருந்து பஸ் எண்: 16, 27, 58 (கடைசி பஸ் இரவு 9:30க்கு)
உடுமலையிலிருந்து பஸ் எண்: 28, 34 (கடைசி பஸ் இரவு 8:30க்கு)

உங்களுக்கு நீங்களே இந்த மூன்று நாட்கள் வாய்ப்பளியுங்கள்.
மூன்று நாட்களும் கலந்துகொள்வோர்க்கு மட்டுமே அனுமதி

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



இயற்கை எழில் சூழ்ந்த மேற்கு தொடர்ச்சிமலை அடிவாரத்தில்

# பஞ்ச சுத்தி கிரியா

உடல்உறு பிணியால் உயிர்உடல் கெடாவகை
அடல்வுறக் காத்தருள் அருட்பெருஞ்ஜோதி - அகவல்

உடல் நலம், மன அமைதி பெற்று ஆரோக்கிய வாழ்வு வாழ மூன்று நாட்கள்

நிகழ்வுகள்... ◎பஞ்ச சுத்தி முறை
(விரேசனம், வமனம், நசியம், அஞ்சனம், ஸ்னானம்)
◎யோகாசனம் ◎பிராணாயமம் ◎மௌனம் ◎தியனம் ◎சத்சங்கம் ◎பக்தி



**ஏப்ரல் 26, 27, 28 2019**

வெள்ளி, சனி & ஞாயிறு

**இடம்:** சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
பெருமாள்மலை அடிவாரம்,
அர்த்தநாரிபாளையம்,
**பொள்ளாச்சி.**

**பயிற்சியில் கலந்து கொள்ளும் அன்பர்கள் கவனத்திற்கு**

1. அன்பர்கள் வியாழன் இரவிற்குள் வந்துவிடவேண்டும்.
2. வயது வரம்பு 18 வயது முதல் 60 வயது வரை.
3. யோகாசனம் செய்வதற்கும், படுப்பதற்கும் 2 பெட்ஷீட் மற்றும் ஆண்கள்: டீ.ஷர்ட், ஃபுல் பேண்ட; பெண்கள்: சுடிதார் போன்ற ஆடைகளை எடுத்து வரவும். நோட்டு, பேனா எடுத்து வரவும்.
4. டார்ச் லைட், ஏர் பில்லோ, வாட்டர் பாட்டில் எடுத்துவரவும்.

**பஸ் ரூட்:** பொள்ளாச்சியிலிருந்து பஸ் எண்: 16, 27, 58 (கடைசி பஸ் இரவு 9.30க்கு)
உடுமலைப்பேட்டையிலிருந்து பஸ் எண்: 28, 54(கடைசி பஸ் இரவு 8.30க்கு)

சைவ உணவாளர்களுக்கு மட்டுமே அனுமதி



உங்கள் உடல் ஆரோக்கியத்திற்கான நன்கொடை ரூ. 1500/-

40 நபர்களுக்கு மட்டுமே அனுமதி
முன்பதிவிற்கு: 89403 96760, 75020 26565

# சீடர் இலக்கணம்

சாதனம் இன்றி ஒன்றைச் சாதிப்பார் உலகில் இல்லை என்பது ஞானிகளின் வாக்கு. குரு தன்னை நாடிவரும் சீடனுக்கு அவனது பக்குவத்தை வைத்தே உபதேசம் செய்கின்றார். எனவே, அச்சாதகன் எத்தன்மையனாய் இருக்க வேண்டும் என்பதை உணர்த்துவதே இக்கட்டுரை.

சாரிபுத்தா புத்தரிடம் வந்தார். அந்த காலத்தில், அதிகம் படித்தவர்களில் அவரும் ஒருவர். அவர் பல விஷயங்களைப் பற்றி கேள்வி எழுப்பினார். பின்பு அவருக்கு தீக்ஷை வழங்கப்பட்டது. அவர் தனக்கு தீக்ஷை வழங்கப்பட்ட வினாடியிலிருந்து, முப்பது ஆண்டுகள் தொடர்ந்து புத்தருடன் இருந்தார். ஆனால் அவர் எதையுமே கேட்கவில்லை.

ஒருவர் சாரிபுத்தாவைப் பார்த்து, "நீங்கள் எவ்வளவோ படித்தவர், உங்களுக்கு புத்தரைவிட எல்லாம் தெரியும் என்று மக்கள் சொல்கிறார்கள். நீங்கள் வரும்போது, ஆழ்ந்த விஷயங்களைப் பற்றி உரையாடினீர்கள். பலவற்றைப் பற்றி கேள்வி எழுப்பினீர்கள். புத்தரை கேள்விக் கேட்கும் அளவிற்கு ஒருவர் இருக்கிறார் என்று நாங்கள் எல்லோரும் சந்தோஷம் அடைந்தோம். மேலும், உங்கள் கேள்விகளால் பல விஷயங்கள் தெரியவந்தது. இல்லாவிட்டால் அவை தெரியாமலேயே இருந்திருக்கும். ஆனால் இப்போது ஏன் மௌனமாகிவிட்டீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு சாரிபுத்தா, "நான் தீக்ஷை பெறுவதற்கு தயாரான நிமிடத்திலிருந்து, என் கேள்விகளை நிறுத்தவேண்டியிருந்தது, ஏனெனில் அதற்குமேல் கேள்வி கேட்பதில் அர்த்தமில்லை. முழு நம்பிக்கை கொள்வதற்கு முன்பே நான் எல்லா கேள்விகளையும் கேட்டுவிட்டேன். இப்போது என் மனம் அமைதியாகிவிட்டது" என்று கூறினார்.

இருப்பினும் புத்தர், சாரிபுத்தா திரும்பவும் ஏதாவது கேள்விக் கேட்கிறாரா என்று சோதிக்க, சில சமயங்களில் மிக அர்த்தமற்ற விஷயங்களைச் சொல்லுவார். அவர் சொல்லும் அர்த்தமற்ற விஷயங்களைக் கேட்டால், அந்த இடத்தில் யாராக இருந்தாலும், "நீங்கள் என்ன சொல்கிறீர்கள்" என்று கேட்க ஆரம்பிப்பார்கள், ஆனால் சாரிபுத்தா மௌனமாகவே இருப்பார்.

இந்த நிலை மிகவும் ஆழமானது; பூரணமானது. ஏனெனில், மனதின் நம்பிக்கையற்ற தன்மை முதலில் சந்தேகத்தை உருவாக்குகின்றது. அதுவே கேள்வியாக உருவெடுக்கின்றது.

ஒன்றன்மீது முழு நம்பிக்கை வந்துவிட்டால் எந்தக் கேள்வியும் வராது. இதுதான் ஒரு சாதகனின் உண்மையான நிலை; உயர்ந்த நிலை.

ஆனால், சாதாரண நிலையில் ஒருவருக்கு நம்பிக்கையற்ற தன்மையும், சந்தேகமும் அதனால் கேள்வியும் வருவது இயல்பே. இப்போதுதான் ஒரு சாதகன் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும். இந்நிலையில் குருவிடமோ அல்லது அவரின் அருள் வார்த்தைகளிலோ சந்தேகம் கொள்ளாமல் கேள்வியை தன்பக்கம் திருப்ப வேண்டும். குரு சொன்ன வார்த்தைகளை நாம் சரியாகக் கடைபிடித்தோமா? இன்னும் நம் சாதனையை எந்த அளவிற்கு ஆழப்படுத்துவது என்றே சிந்திக்க வேண்டும். இதுவே ஆரம்ப சாதகனுக்கு உகந்த நிலை.

1925களில் ரமணாஸ்ரமம் சரியாக வளர்ச்சி அடையாத காலம். அக்காலத்தில் ஒரு பதினெட்டு வயது பெண்மணி கணகாம்பாள் என்பவர் பகவானுடன் தங்கி சாதனை செய்ய எண்ணம் கொண்டு திருவண்ணாமலைக்கு வந்துவிட்டார். அப்போது அங்கு வசதியில்லாத காரணத்தினால் அவரை அண்ணாமலையார் கோயில் அருகில் ஒரு வீட்டில் தங்கவைத்தனர். தினமும் அங்கிருந்து பகவான் இருக்கும் இடத்திற்கு வந்து உபதேசம் கேட்டு சாதனை செய்து வந்தார்.

ஆண்டுகள் கடந்தன. அப்பெண்மணிக்கு முப்பத்தைந்து வயதாகியது. இந்நிலையில், “பகவான் சொன்ன சாதனையை செய்தும் நமக்கு அந்த ஆனந்த அனுபவம் ஏற்படவில்லையே ஏன்?” என்ற சந்தேகம் வந்தது. இதை எப்படியும் பகவானிடம் கேட்க வேண்டும் என்று எண்ணினார்.

பகவான் வந்து இருக்கையில் அமர்ந்ததும் அவர் முகத்தைப் பார்ப்பார். கேள்வியே மறந்துவிடும். இப்படி ஒவ்வொரு முறையும் இந்த கேள்வியை கேட்டுவிட வேண்டும் என்றே பகவானிடம் வருவார். ஆனால், அவர் கண்களைப் பார்த்ததுமே கேள்வி மறந்துவிடும். இப்படியாக ஆறு மாதங்கள் கடந்தன.

இறுதியாக, “நான் பகவானின் கண்களைப் பார்த்தால்தானே இந்தக் கேள்வி மறந்துவிடுகிறது. என் கண்களை மூடிக்கொண்டு அவர் வந்ததும் கண்களைத் திறந்து முதலில் இந்தக் கேள்வியை கேட்டுவிட வேண்டும்” என்று எண்ணி ஒருநாள் அவரது ஆசனத்திற்கு அருகில் கண்களை மூடியவண்ணம் அமர்ந்திருந்தார்.

பகவான் வந்து அமர்ந்தார். அப்போது அவருக்குள்ளாக, “குரு ஒரு சாதனையைச் சொல்லி அதில் இன்ன அனுபவம் வரும் என்று எதை வைத்துக் கூறுவார்? தன் அனுபவத்தை வைத்துதானே சொல்லியிருப்பார். எனக்கு அந்த அனுபவம் வரவில்லையானால் நான் அதைச் சரியாக செய்தேனா, அதில் முழு மனதுடனும், வைராக்கியத்துடனும் ஈடுபட்டேனா என்றுதானே பார்க்க வேண்டும்.

அதைவிடுத்து அவர் கூறிய உபதேசத்தில் சந்தேகம் கொள்ளலாமோ'' என்ற எண்ணம் தோன்றியது. உடனே அவருக்குள்ளாக ஓர் அபரிமிதமான ஆனந்தம் பொங்கி வழிந்தது.

இஃது கணகாம்பாள் அம்மையார் பின்னாளில் ஒரு நேர்காணலில் பகவான் சன்னிதியில் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை பகிர்ந்து கொண்ட செய்தி.

ஒரு ஆத்ம சாதகனுக்கு தன் வாழ்நாள் முழுவதும் தேவைப்படுவது நம்பிக்கை மட்டுமே. அதுவே அவனை இறுதிவரை தளர்ச்சி அடையாது பயணிக்கச் செய்யும்.

நம்பிக்கை வைத்த பின்பு சந்தேகமே இல்லாதிருத்தல் சாரிபுத்தர் போன்ற அதிதீவிர சாதகர்களுக்குச் சாத்தியம். ஆனால் சாதாரண ஆரம்ப நிலை சாதகர்கள் கேள்வி எழும்போதெல்லாம் அதை தனக்குள்ளாக திருப்பி தன் சாதனையை இன்னும் ஆழப்படுத்த வேண்டும்.

ராமகிருஷ்ண பரமஹம்சர், "நமது வாழ்வில் அன்னை என்பவள் உண்மை. தந்தை என்பவர் நம்பிக்கை மட்டுமே. அன்னை ஒருவரைக் காண்பித்து இவர்தான் உன் தந்தை என்றதும் அந்த சொல்லில் நம்பிக்கை வைத்து அவரை நாம் தந்தையாக ஏற்கிறோம். இதுபோல் குரு சொன்ன வார்த்தையில் நம்பிக்கை வைத்து சாதனை செய்வது சாதகனின் தன்மையாக இருக்க வேண்டும்'' என்கிறார்.

நம் வள்ளல் பெருமான் அருளிய சுத்த சன்மார்க்கம் நம் புலன்களுக்கும் அறிவிற்கும் அப்பாற்பட்ட அனுபவத்தைக் கூறுகின்றது. எனவே நாம் இதில் பயணிக்கும்போது நம்பிக்கை வைத்து பயணிக்க வேண்டும்.

நம் பெருமானார் உரைநடைப் பகுதியில் அருளியதாவது, "நம்மைப் பெற்ற தாயைப் பார்க்கிலும் அனந்தங்கோடிப் பங்கு நம்மீது தயவு உள்ளவன் நமது ஆண்டவன். ஆதலால், நமக்கு ஒருகாலத்திலும் குறைவு நேரிடாது. இது சத்தியம். **ஆனால் நாம் நம்பிக்கை தவறாது இருக்க வேண்டும்**'' என்பதாம். இதனையே திருஅருட்பாவில்,

நானுரைக்கும் வார்த்தையெலாம் நாயகன்தன் வார்த்தை
**நம்புமினோ** நமரங்காள் நற்றருணம் இதுவே
வானுரைத்த மணிமன்றில் நடம்புரி எம்பெருமான்
வரவுஎதிர்கொண்டு அவன்அருளால் வரங்கள்எலாம் பெறவே
தேன்உரைக்கும் உளம்இனிக்க எழுகின்றேன் நீவீர்
தெரிந்து அடைந்து என்னுடன் எழுமின் சித்திபெறல் ஆகும்
ஏனுரைத்தேன் இரக்கத்தால் எடுத்துரைத்தேன் கண்டீர்
யானடையும் சுகத்தினை நீர்தான் அடைதல் குறித்தே என்கின்றார்.

திருஅருட்பாவில் நெஞ்சைத் தேற்றல் என்ற தலைப்பின்கீழ் வரும் வேறொரு பாசுரத்தில்,

சென்று வஞ்சர்தம் புறங்கடை நின்று
திகைக்க எண்ணும் என் திறன்இலா நெஞ்சே
ஒன்றும் அஞ்சலை என்னுடன் கூடி
ஒற்றியூர்க்கு இன்று வருதியேல் அங்கு
மன்றுள் மேவிய வள்ளலார் மகிழ்ந்து
வாழ்கின்றார் அவர் மலரடி வணங்கி
நன்று வேண்டிய யாவையும் வாங்கி
நல்குவேன் எனை **நம்புதி மிகவே** என்கின்றார்.

புத்தி அஞ்சேல் சற்றும் என் நெஞ்சமே சிற்பொது தந்தையார்
நித்தியம் சேர்ந்த நெறியில் செலுத்தினர் நீஇனி நன்
முத்தியும் ஞானமெய்ச் சித்தியும் பெற்று முயங்கிடுவாய்
**சத்தியம் சத்தியம் சத்தியம் சத்தியம் சத்தியமே.**

என மற்றுமோர் பாசுரத்தில் ஜீவர்களாகிய நம் மனதில் நம்பிக்கை வரவேண்டும் என ஐந்து முறை சத்தியம் செய்து உரைக்கின்றார்.

மேலும், வேறு எந்த வகையில் ஒரு சாதகன் நம்பிக்கையை தீவிரப்படுத்திக் கொள்வதெனில், குருவினுடைய வார்த்தையை பலமுறை கேட்கவும் அதுகுறித்து சிந்தக்கவும் வேண்டும். அவர்களுடைய வார்த்தைகள் அருள் நிலையிலிருந்து எழுதப்பட்டவை ஆதலால், முதல்முறை கேட்கும்போது ஒருவாறு விளங்கினாலும், பலமுறை கேட்கும்போதும், படிக்கும்போதும் அதே வார்த்தைகள் வேறு விதமாக ஆழ்ந்த தன்மையில் புரியும். இதனால் சந்தேகம் நீங்கி நம்பிக்கை பிறக்கும். நாம் பூரண ஞானத்தைப் பெற்று ஆத்மானந்தத்தில் திளைக்கலாம்.

**அஞ்ஞானம் சந்தேக விபரீதங்கள் படர்செய்யும் இந்த மூன்றும்**
**பலஜென்மப் பழக்கத்தாலே உடன் உடன் வரும் வந்தக்கால்**
**உயர் ஞானம் கெடும் இவற்றை திடமுடன் கெடுப்பாய்**
**கேட்டல் சிந்தித்தல் தெளிதலாலே**

என்கிறது தாண்டவராய சுவாமிகள் அருளிய கைவல்ய நவநீதம்.

திருச்சிற்றம்பலம்

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

# மூத்தோர் சொல் அமிர்தம்

மகானிடம் வந்த பக்தன் ஒருவன், "சுவாமி! நான் மனதார எந்தத் தவறும் செய்ததில்லை, பிறருக்கு எந்தக் கெடுதலும் நினைப்பதில்லை. ஆகவே எனது மனம் தூய்மையாக உள்ளது. எனக்கு தங்களுடைய உபதேசம் தேவைதானா?" என்று கேட்டான்.

அதற்கு மகான், "நீ இரண்டு நாட்களுக்கு எந்த வேலையும் செய்யாமல் அமைதியாக ஓர் இடத்தில் உட்கார்ந்திரு. அதன் பின் வா. பிறகு உனக்கு உபதேசம் தேவையா? இல்லையா? என்று தெரிந்துவிடும்" என்றார். அவர் சொன்னபடியே இரண்டு நாட்கள் கழித்து வந்தான் பக்தன்.

"மகனே! உன் ஆடைகளில் ஏன் இவ்வளவு தூசு படிந்துள்ளது, உன் முகத்திலும் அழுக்குப் படிந்து கிடக்கிறதே. எந்த ஒருவேலையும் செய்யாமல் ஓர் இடத்தில் உட்கார்ந்து இருக்கும் போதே உன் மேல் இவ்வளவு மாசு படிந்திருக்கும்போது, உன் மனதில் எவ்வளவு அழுக்கு படிந்திருக்கும். அதற்கு நல்ல எண்ணங்களை மனதுக்குள் எப்போதும் நிரப்பிக்கொண்டிருக்க வேண்டும். அதற்குத்தான் இந்த உபதேசம் தேவைப்படுகிறது" என்றார்..

கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி.

**பொருள்:** இயற்கையாகவே கேட்கக்கூடிய காதுகளாக இருந்தாலும் அவை குருவின் உரைகளைக் கேட்க மறுத்தால் செவிட்டுக் காதுகள் என்றே கூறப்படும்.

அரசர் கிருஷ்ணதேவராயருக்கு அன்று விபரீதமான ஓர் ஆசை ஏற்பட்டது. அவர் அப்பாஜியிடம், "அமைச்சரே, இன்று மாலை ஆறு மணிக்குள் நம் தலைநகரான விஜயநகரை நீர் நன்றாகச் சுற்றிப் பார்த்து, ஆறு முட்டாள்களின் விலாசத்தைக் குறித்துக் கொண்டு வாருங்கள்" என்று ஆணையிட்டார்."முட்டாள்களின் முகவரி எதற்கு?" என்று பணிவுடன் கேட்டார் அப்பாஜி.

"வீணாக விளக்கம் கேட்க வேண்டாம். சொன்னதைச் செய்யும்!" என்று அரசர் கண்டிப்பாகக் கூறினார். அரசர் விருப்பப்படி முட்டாள்களைத் தேடி அலைந்தார் அப்பாஜி. அந்தி நேரத்திற்குள் ஆறு முட்டாள்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்கள் விலாசத்தைக் குறிக்க வேண்டுமே! எங்கே போவது? எப்படி முட்டாள்களைச் சந்திப்பது? அப்பாஜி இரண்டு மணி நேரம் மாறு வேடமணிந்து முட்டாள்களைத் தேடினார்.

*யாரையும் காணோம். நகர எல்லையை ஒட்டிய மரத்தின் நிழலில் சிறிது நேரம் நின்றார். அப்போது ஒருவன் கழுதை மீது ஏறி வந்தான். அவன் தலை மீது ஒரு புல்கட்டினைச் சுமந்து கொண்டிருந்தான்.*

*“ஐயா, கழுதை மீது இருக்கும் நீர் ஏன் புல்கட்டினைச் சுமந்துக் கொண்டிருக்கிறீர்?” என்று கேட்டார் அப்பாஜி.*

*“உமக்கு அறிவு இருக்கா? என் கழுதைக்கு வயதாகிவிட்டது. ரொம்பவும் தளர்ந்து விட்டது; அதனால், என்னை மட்டுமே சுமக்க இயலும். இந்தப் புல்கட்டினையும் சேர்த்துச் சுமக்க இயலாது. ஆகவே, நான் புல்கட்டினைச் சுமந்து செல்கிறேன்” என்றான்.*

*அப்பாஜிக்கு ஒரே மகிழ்ச்சி. தான் தேடி வந்த முட்டாள்களில் ஒருவன் அகப்பட்டுக் கொண்டானே அவனிடம் சாமர்த்தியமாகப் பேசி அவனது விலாசத்தைக் கேட்டுக் குறித்துக் கொண்டார்.*

*சிறிது தூரம் சென்றதும் அருகில் உள்ள ஒரு மரத்தின் நுனி கிளையில் ஒருவன் உட்கார்ந்து மரத்தை வெட்டிக் கொண்டிருந்தான். அவனைப் பார்த்த அப்பாஜி, “ஐயா! இப்படி உட்கார்ந்துக் கொண்டு வெட்டினால் நீங்கள் கீழே விழுந்து விடுவீர்கள். அந்த பக்கமா உட்கார்ந்து வெட்டுங்கள்” என்றார்.*

*“ஏன்யா, நான் என்ன மடயன்னு நெனச்சியா நான் இப்படி உட்கார்ந்துகிட்டு மரத்தை வெட்டினா இந்த மரக்கிளை கீழே விழும். நீ உடனே தூக்கிகிட்டு ஓடலாம்னு பார்த்தியா? அதுக்காகத் தானே நான் இங்க உட்கார்ந்துகிட்டு வெட்டுறேன்” என்றான்.*

*“சே! உங்க புத்திசாலித்தனம் யாருக்கு வரும் உங்க வீட்டு முகவரியை கொடுங்க” என்று வாங்கிக் கொண்டார். அடுத்து பாட்டி ஒருத்தி அடுப்பை பற்றவைக்க மிகவும் போராடிக் கொண்டிருந்தார்.*

*“பாட்டி என்ன பிரச்சனை?” என்றார் அப்பாஜி, “அய்யா இது நல்லா காஞ்ச விறகுதான். மண்ணெண்ணெய் இல்லை. தண்ணியும், மண்ணெண்ணெயும் ஒரே மாதிரி தானே இருக்கு. அதனால் இந்த விறகுகள்ல நல்லா தண்ணிய ஊத்தி எரிய வைக்க முயற்சி செய்றேன் எரியவே மாட்டேங்குது,” என்றாள். சிரித்துக் கொண்டே அவளது முகவரியையும் குறித்துக் கொண்டார் அப்பாஜி. அடுத்த முட்டாள் அவ்வளவு எளிதில் கிடைக்கவில்லை. இன்னும் மூன்று முட்டாள்களைத் தேடியாக வேண்டுமே! ஒரு மணி நேரமே உள்ளது.*

*அலுத்துப் போய் ஆற்றங்கரைக்குச் சென்றார் அப்பாஜி. அங்கே ஒருவன் குளித்து முடித்துவிட்டு இங்கும் அங்கும் அலைந்து கொண்டிருந்தார்.*

அப்பாஜி அவனிடம், "தாங்கள் எதைத் தேடிக் கொண்டு அலைகிறீர்கள்?" என்று விசாரித்தார்.

அவன், "ஐயா, நான் என் உடைகளையும் கொஞ்சம் பணத்தையும் ஓர் இடத்தில் வைத்துவிட்டுக் குளித்தேன். குளித்துவிட்டு வந்து பார்த்தால் பணத்தையும், உடைகளையும் காணோம்," என்று கவலையுடன் கூறினான். "ஏதாவது அடையாளம் வைத்து இருந்தாயா?" என அப்பாஜி கேட்க அவனும், "ஆமாம், அடையாளத்தையும் காணோம்" என்றான்.

அப்பாஜி, "என்ன அடையாளம்?" எனக் கேட்க, "வானத்தில் வெண்மேகம் ஒன்றிருந்தது. அதை அடையாளமாகக் கொண்டு அதன் அடியில் அவற்றை வைத்தேன்" என்றான். அவனது முட்டாள்தனத்தைப் புரிந்து கொண்ட அப்பாஜி அவன் பெயரோடு விலாசத்தையும் குறித்துக் கொண்டார். மாலை ஆறு மணி ஆயிற்று. அப்பாஜி அரசனிடம் விரைந்து சென்றார். நான்கு முட்டாள்களுடைய விலாசத்தையும் கொடுத்தார்.

கிருஷ்ணதேவராயர் அவற்றைப் பார்த்தார். முட்டாள்களின் விபரங்களை அறிந்து ரசித்து சிரித்த அரசன், "அமைச்சரே, இன்னும் இரண்டு முட்டாள்களின் விலாசம் எங்கே?" என்று கேட்டார்.

அப்பாஜி, "அரசே, ஒரு பெரிய சாம்ராஜ்ஜியத்தின் மந்திரி நாள் முழுவதும் முட்டாள்களைத் தேடிக் கொண்டு அலைந்தது முட்டாள்தனமல்லவா! ஆகவே, எனது விலாசத்தை ஐந்தாவதாக எழுதிக் கொள்ளுங்கள்", என்று பணிவோடு வேண்டினார். அரசரும் அப்பாஜியின் முகவரியை எழுதிக் கொண்டார். பிறகு, "அமைச்சரே, ஆறாவது முட்டாளின் விலாசம் எங்கே?" என்றார் அரசர் ஆர்வத்துடன்.

"அரசே, கோபித்துக் கொள்ளாதீர்கள் உங்கள் விலாசம் உங்களுக்குத் தெரியாதா? ஒரு நாட்டின் அமைச்சருக்கு என்ன வேலை கொடுக்க வேண்டும் என்று ஒரு ஒழுங்கு கிடையாதா? நாம் அறிவாளிகளைத் தேடிக் கண்டுபிடித்து, அவர்களால் பல நன்மைகளைப் பெற வேண்டுமே தவிர, முட்டாள்களைத் தேடிக் கண்டுபிடித்து, அவர்களது தொடர்பால் நம்மையும் முட்டாளாக்கிக் கொள்ளக் கூடாதல்லவா!" என்று உருக்கமாகக் கூறினார்.

**என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு**
**நன்றி பயவா வினை. – வினைத் தூய்மை**

பொருள்: புகழையும், அறத்தையும் தராத தூய்மையற்ற செயல்களை ஒருவன் எக்காலத்திலும் செய்யாமல் விட்டொழிக்க வேண்டும்.

திருச்சிற்றம்பலம்

# அருளில் விளைந்த அருட்களஞ்சியம்

திருவருட்பிரகாச வள்ளல் பெருமானார் சமரச சுத்த சன்மார்க்கம் என்ற ஒரு சமயாதீதப் பொதுநெறியை, சமயம் கடந்த சமரச நெறியை, சர்வ சமய சமரச நெறியை ஏற்படுத்தினார். கடவுள் ஒருவரே என்பதும், அவ்வொரு கடவுளை ஜோதி வடிவில் வழிபட வேண்டும் என்பதும் வள்ளல் பெருமானது சமரச சுத்த சன்மார்க்கத்தின் முடிந்த முடிவான கொள்கை. வள்ளலாரின் சன்மார்க்கத்தில் முதலும் முடிவுமான, முடிந்த முடிபான வழிபாடு ஜோதி வழிபாடே. அந்த ஜோதிக்கு வள்ளலார் அருட்பெருஞ்ஜோதி என்று பெயரிட்டார்.

**அருட்பெருஞ்ஜோதி வழிபாட்டிற்காகவே வள்ளல் பெருமானாரால் வடலூரில் சத்திய ஞானசபை கட்டப்பெற்றது. அருட்பெருஞ்ஜோதி அகவல் பாடப்பெற்றது. அருட்பெருஞ்ஜோதி மகாமந்திரம் வழுங்கப்பெற்றது.**

திருவருட்பா திருமுறைகள் ஆறினுள்ளும் ஆறாம் திருமுறை சிறந்தது. அதனுள்ளும் அருட்பெருஞ்ஜோதி அகவல் சிறந்தது. திருவருட்பாவை ஒரு ஞான உடம்பாகக் கொண்டால் அதன் முகம் ஆறாம் திருமுறை. அம்முகத்தில் கண் போன்றது அருட்பெருஞ்ஜோதி அகவல். அக்கண்ணுள் மணியாகத் திகழ்வது அருட்பெருஞ்ஜோதி மகாமந்திரம்.

வள்ளல் பெருமானோடு பழகியவர்களில் ஒருவராகிய ஆனந்தநாத சண்முகசரணாலய சுவாமிகள் என்பவர் பெருமானது திருவருட்பாக்களில் சிலவற்றைத் தொகுத்து, திருவருட்பா உண்மை விளக்கம் என்ற பெயருடன் வெளியிட்டு அதன் முன்னுரையில் "திருவருட்பிரகாச வள்ளல் பெருமான் அருளிய திருப்பாசுரங்கள் யாவும் விசேடமேயாயினும், முன் ஐந்து திருமுறைகளும் சமயத்திற்கு உட்பட்ட சொரூப தோத்திரமாயும், ஆறாவது திருமுறை சமயாதீத பரவஸ்துவின் இலக்கணத்தை உள்ளடக்கி நிற்கும் தோத்திரப் பாக்களாயும், அதிலும் அத்திருமுறை முன்புள்ள அருட்பெருஞ்ஜோதி அகவற்பாவானது அவ்வள்ளற் பெருமானுக்கு அருட்தரிசனம் உண்டானகாலையில் அருளிச் செய்தது எனவும் உணரப் பெற்றேன்" என்று எழுதுவது உண்மையிலும் உண்மை. தம் புறத்தும் அகத்தும் அருட்பெருஞ்ஜோதியைக் கண்டு தரிசிக்கப் பெற்று, அருட்பெருஞ்ஜோதி அனுபவம் முழுவதுமாகக் கைவரப் பெற்றுத் திளைத்த காலத்தில் அருட்பெருஞ்ஜோதி அகவல் அருளப்பெற்றது.

பெருமானது அருளிச்செயல்கள் அனைத்தையும் ஓதி உணர்வோர் இவ்வுண்மையை நன்குணர்வர்.

திருவாசக முதல் நான்கு அகவல்கள், ஔவையார் அருளிய விநாயகர் அகவல், வென்றிமாலைக் கவிராயர் பாடிய திருச்செந்தூர் அகவல் என அருட்பெருஞ்ஜோதி அகவலுக்கு முன்னும் பின்னும் தோன்றிய அகவல்கள் பல இருக்க அவை அனைத்திலும் சிறந்து விளங்குவது, அகவல் உலகில் அரசாகத் திகழ்வது வள்ளற்பெருமானின் அருட்பெருஞ்ஜோதி அகவலே.

தோத்திரத்துக்குச் சிறந்தது திருவாசகம், சாத்திரத்துக்குச் சிறந்தது திருமந்திரம் என்பது ஒரு முதுமொழி. வள்ளலாரின் அருட்பெருஞ் ஜோதி அகவல் தோத்திரச் சிறப்பு, சாத்திரச் சிறப்பு ஆகிய இரண்டையும் பெற்றுத் திகழ்வது. தோத்திரச் சிறப்பால் சிறந்த பாராயண நூலாகத் திகழ்கிறது. சாத்திரச் சிறப்பால் உரை காண்பதற்கு அரிய நூலாக திகழ்கிறது. அகவலில் புராணக் கருத்துக்களே இல்லை. அவ்வளவும் முழுக்க முழுக்கத் தத்துவக் கருத்துக்களே. விஞ்ஞான மெய்ஞ்ஞானக் கருத்துக்களே. இடையிடையே பல இடங்களில் வள்ளற்பெருமானுக்கே உரிய உயிரிரக்கக் கருத்துக்களும் காணக்கிடைக்கின்றன.

## அருட்பெருஞ்ஜோதி அகவல் அருளப்பெற்ற காலம்

வள்ளல் பெருமானார் 1870 முதல் 1874 வரை கருங்குழிக்கு அடுத்த மேட்டுக்குப்பத்தில் சித்திவளாகத் திருமாளிகையை உரைவிடமாகக் கொண்டார். இந்த காலகட்டத்தில் 1872ல் வடலூரில் சத்திய ஞானசபையைக் கட்டி ஜோதி வழிபாட்டை ஏற்படுத்தி அருளினார். அதே ஆண்டில் 18-04-1872 (ஆங்கிரச வருடம் சித்திரை மாதம் 8ஆம் நாள்) வியாழக் கிழமை அருட்பெருஞ்ஜோதி அகவலைப் பாடி அருளினார். அடுத்த ஆண்டில் 1873ல் சன்மார்க்கக் கொடி கட்டி, பேருபதேசம் செய்து அதில் அருட்பெருஞ்ஜோதி மகாமந்திரத்தை வழங்கி அருளினார்.

1874ல் 51ஆம் அகவையில் தாம் உறைந்த மேட்டுக்குப்பம் சித்திவளாகத் திருமாளிகையிலேயே சுத்த பிரணவ ஞானதேத்துடன் அருட்பெருஞ்ஜோதி மயமாய்ச் சித்திபெற்று இன்றும் அருளாட்சி செய்து வருகிறார்.

சித்திவளாகத்தில் எழுந்தருளியிருந்து, தம் அகத்தே சத்திய ஞானசபையைக் கண்டும், புறத்தே உத்தரஞான சிதம்பரமாம் வடலூரில் சத்திய ஞானசபையைக் கட்டியும் அகத்தும் புறத்தும்

அருட்பெருஞ்ஜோதியை தரிசிக்கப்பெற்று, அருட்பெருஞ்ஜோதி அனுபவம் முழுவதும் கைவரப் பெற்றுத் திளைத்த காலத்தில் அருட்பெருஞ்ஜோதி அகவலைப் பெருமான் பாடியருளினார். சமரச சுத்த சன்மார்க்கத்தின் ஒரே கடவுளான அருட்பெருஞ்ஜோதி இறைவன் மீது அகவற்பாவால் பாடப்பெற்றதால் **அருட்பெருஞ்ஜோதி அகவல்** என்னும் பெயர் பெற்றதாயிற்று.

## அருட்பெருஞ்ஜோதி அகவலின் யாப்பு

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா எனப் பா நான்குவகை. தாழிசை, துறை, விருத்தம் எனப் பாவினம் மூன்றுவகை. நால்வகைப் பாக்களையும் மூவகைப் பாவினங்களையும் வள்ளல் பெருமான் பாடியுள்ளார். ஆசிரியப்பா என்பது அகவல் ஓசையால் பெற்ற பெயர். "அகவலென்பது ஆசிரியம்மே" என்பது தொல்காப்பியச் சூத்திரம்.

வெண்பாவிற்குச் செப்பல் ஓசை, ஆசிரியப்பாவிற்கு அகவல் ஓசை, கலிப்பாவிற்கு துள்ளல் ஓசை, வஞ்சிப்பாவிற்குத் தூங்கல் ஓசை என்பன நால்வகைப் பாக்களுக்கும் உரிய ஓசைகளாம். அகவல் ஓசையால் ஆசிரியப்பா அகவல் எனப் பெயர் பெற்றது.

**ஆசிரியப் பாட்டின் அளவிற்கு எல்லை**
**ஆயிரம் ஆகும் இழிபு மூன்றடியே**

என்பது ஆசிரியப்பாவின் அடிவரையறையைக் கூறும் தொல்காப்பியச் சூத்திரம். ஆசிரியப்பா மூன்றடிச் சிறுமையும் ஆயிரம் அடிப் பெருமையும் பெற்று வரும்.

ஆயிரம் வரிகளாலான ஆசிரியப்பா அக்காலத்தில் இல்லை. சங்க இலக்கியங்களுள் வரியால் மிகுத்து வந்த பாட்டு பத்துப்பாட்டுள் ஒன்றாகிய மதுரைக்காஞ்சியே. மதுரைக் காஞ்சி 782 அடிகளால் ஆன ஆசிரியப்பா. சங்க காலம் முதல் வள்ளலார் காலம் வரை இதனினும் மிகுத்து வந்த பாட்டு வேறில்லை.

ஆயிரம் அடியினும் மிகுத்து வந்த பா, பெருமான் அருளிய அருட்பெருஞ்ஜோதி அகவலே. ஆயிரம் அடி என்ற இலக்கண வரம்பையும் கடந்து ஆயிரத்து ஐந்நூற்றுத் தொண்ணூற்று ஆறு (1596) அடிகளால் வள்ளல் பெருமான் அருட்பெருஞ்ஜோதி அகவலை இயற்றியருளியுள்ளார். இனி தொல்காப்பியம் பதிப்பிப்பாரும் புத்துரை வரைவாரும் ஆயிரம் அடியினும் மிகுத்து வந்ததெனப் பெருமானின் அருட்பெருஞ்ஜோதி அகவலை எடுத்துக்காட்டலாம்.

## திருவாசக முதல் நான்கு அகவல்களும் திருவருட்பா அருட்பெருஞ்ஜோதி அகவலும்

திருவாசகத்திற்குப் புகுமுகம் போன்று, நுழைவாயில் போன்று அமைந்தவை அதன் முதல் நான்கு அகவல்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | சிவபுராணம் | கலிவெண்பா | 95 அடிகள் |
| 2. | கீர்த்தித் திருஅகவல் | நிலைமண்டில ஆசிரியப்பா | 146 அடிகள் |
| 3. | திருவண்டப்பகுதி | இணைக்குறள் ஆசிரியப்பா | 182 அடிகள் |
| 4. | போற்றித்திருஅகவல் | நிலைமண்டில ஆசிரியப்பா | 225 அடிகள் |

இந்நான்கும் ஒன்றினுக்கு ஒன்று நீண்டவை. அடிவரையறையில் ஒன்றனுக்கொன்று மிகுந்து செல்கிறது. நீள்கிறது, ஏறிக்கொண்டே போகிறது. இந்நான்கில் சிவபுராணம் தவிர ஏனைய மூன்றும் ஆசிரியம்; அகவல். மூன்று ஆசிரியப்பாக்களில் கீர்த்தித் திருஅகவல், போற்றித் திருஅகவல் என்ற இரண்டு பாக்கள் அகவல் என்றே பெயர் பெற்றன. சிவபுராணம் கலிவெண்பா எனினும் நான்கையும் அகவல்கள் என்று கூறுவதே வழக்கம். திருவாசக முதல் நான்கு அகவல்கள் என்பது மரபு.

திருவாசக நான்கு அகவல்களும் சேர்ந்து (95+146+182+225) 648 அடிகள். வள்ளற்பெருமான் அருளிய அருட்பெருஞ்ஜோதி அகவல் திருவாசக நான்கு அகவல்களையும் விஞ்சி 1596 அடிவரை நீண்டது.

திருவாசக அகவல்களில் சாத்திரக் கருத்துக்கள் மிகுதி எனினும் புராணக் கருத்துக்களும் மிகப் பல உண்டு. ஆனால், அருட்பெருஞ்ஜோதி அகவலில் புராணக் கருத்துக்களே இல்லை; முழுக்க முழுக்க விஞ்ஞான மெய்ஞ்ஞான தத்துவக் கருத்துக்களே.

மாணிக்கவாசகர் சமய சன்மார்க்கத்தை விளக்க வந்தவர். அதனைச் சிவசன்மார்க்கம் என்பார் நம் பெருமானார். ஆனால், வள்ளல் பெருமானோ சமரச சுத்த சன்மார்க்கத்தை விளக்க வந்தவர்.

### அருட்பெருஞ்ஜோதி அகவலின் அமைப்பு முறை

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி என்று அருட்பெருஞ்ஜோதியை நான்குமுறை அடுக்கிக்கூறி தொடங்கும் அருட்பெருஞ்ஜோதி அகவல், அவ்வாறே நான்குமுறை அடுக்கிக்கூறி முடிகிறது.

அகவலின் தொடக்கமும் முடிவும் அருட்பெருஞ்ஜோதியே. பெரும்பாலும் இரண்டிரண்டு அடிகள் ஒரு தொடராய், ஒருபொருள் முற்றுவதாய், இரண்டாம் அடி ஈற்றில் அருட்பெருஞ்ஜோதி என்னும் விளி ஏற்று அமைந்தது.

*பலஅடிகள் ஒரே தொடராக அமைந்துள்ள இடங்களும் உள்ளன. 1 முதல் 874ஆம் அடி வரை அருட்பெருஞ்ஜோதி என்பதே விளி. அதன்பின் 875ஆம் அடி முதல் 1554ஆம் அடி வரை பல்வேறு விளிகள். மீண்டும் 1555ஆம் அடி முதல் நிறைவு வரை அருட்பெருஞ்ஜோதியே விளி.*

**அருட்பெருஞ்ஜோதி அகவல் கூறும் அரும்பொருள்களும் அனுபவங்களும்**

*“எங்கே கருணை இயற்கையின் உள்ளன அங்கே விளங்கிய அருட்பெருஞ் சிவமே”, “கொல்லா நெறியே குருவருள் நெறி” என்பன போன்ற அனைவரும் எளிதிற் பொருள் புரிந்து கொள்ளக் கூடிய பொதுவான உண்மைகளும், எளிதில் பொருள் விளங்காதனவும், அறிஞர்களும் திகைக்கும் அளவிற்கு மறைபொருள் உடையனவுமான இடங்களும் அகவலில் பல உண்டு.*

*ஆறு அந்தங்கள்; அவன், அவள், அது; அகரஉகரம், சிகரவகரம்; ஐந்து, எட்டு, ஆறு, நான்கு எழுத்து மந்திரங்கள்; மணி, மந்திரம், மருந்து; ஓமயத் திருவுரு; சுத்த, பிரணவ, ஞானதேகம் என்னும் முத்திறல் சித்திகள்; முத்தியும், சித்தியும்; பட்டிமண்டபம்; அக, அகப்புற, புற, புறப்புற அமுதங்கள்; ஐந்துவகை, ஏழுவகை, எட்டுவகை, ஒன்பது வகை அமுதங்கள்; ஐம்பூத இயல்கள்; ஏழு திரைகள்; மூவிரு, ஏழு, நவ, ஏகாதச, திரயோதச, ஈரெண் நிலைகள்; மூவகை உயிர்கள் முதலிய தத்துவப் பொருள்களும் ஓதாது உணர்தல்; உடம்பு முழுவதும் அமுதம் ஓடி நிரம்புதல்; சாமாறு தவிர்த்து ஆமாறு அருளியது (இறவாவரம்); செத்தாரை எழுப்புதல்; அடிமுடி காட்டியது; அடிமுடி சூட்டியது; ஆழி அளித்தது; செங்கோல் அளித்தது; ஐந்தொழில் ஆற்றல் அளித்தது; எல்லாம்வல்ல சித்தி போன்ற உயர்நிலை அனுபவங்களும் இன்னும் இவை போன்ற பற்பல அரும்பொருள்களும் அகவலில் கூறப்பெறுகின்றன. அனைத்தும் தத்துவ விளக்கங்கள், பெருமானது அனுபவ உண்மைகள்.*

*வள்ளற் பெருமான் தம் கைப்பட எழுதியருளிய இந்த அருட்பெருஞ்ஜோதி அகவலின் மூல ஏடு வடலூரில் சத்திய தருமச்சாலையில் அன்பர்கள் அனைவரும் கண்டு வழிபட வைக்கப் பட்டுள்ளதை இன்றும் காணலாம்.*

*இத்தகைய பெருமை வாய்ந்த அருட்பெருஞ்ஜோதி அகவல் கிடைத்தது நாம் செய்த பாக்கியமாகக் கருதி அனுதினமும் இவ்வகவலை ஓதி பயன்பெறுவோமாக!*

திருச்சிற்றம்பலம்

# அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

**சத்தி நிபாதம் தனை அளித்து, எனைமேல்**
**வைத்து, அமுது அளித்த, மரபுடைத் தாயே**

இருவினைஒப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் என மூன்று அனுபவ நிலைகள் ஞானமார்க்கத்தில் உண்டு.

இருவினைஒப்பு என்பது நல்வினை தீவினை ஆகிய இரண்டிலும், இவற்றின் விளைவாகிய புண்ணியம் பாவம் ஆகிய இரண்டிலும், இவற்றின் பயனாகிய இன்பம் துன்பம் ஆகிய இரண்டிலும், ஒன்றில் விருப்பும் மற்றொன்றில் வெறுப்பும் இன்றி, ஒப்பக் கருதுதல்.

மலபரிபாகம் என்பது மலம் பரிபாகப்படுதல். மலம் என்பது இங்கு ஆணவமலம். ஆணவ மலத்தினது சத்தி, ஆன்ம அறிவை மயக்க இயலாமல் வலிமை குன்றி நிற்றல். (மலம் – ஆணவமலம். பரி – உபசர்க்கம். பாகம் – திரிவு; பக்குவம்)

சத்திநிபாதம் என்பது இருவினையும் ஒத்து, மலபரிபாகம் ஏற்பட்டபோது சத்திநிபாதம் உண்டாகும். அதாவது, ஆன்மாவில் அருட்சத்தி பதியும். சத்தி நிபாதம் – அருட்சத்தி பதிதல். (சத்தி – அருட்சத்தி; நி – உபசர்க்கம்; பாதம் – பதிதல்) திருவருள் வீழ்ச்சி.

**சத்திநிபாதம் தனை அளித்து – திருவருட்சத்தியை என்னுள் பதியவைத்து**

**எனைமேல்வைத்து – என்னை மேல்நிலையில் ஏற்றி**

**அமுதளித்த – அமுதம் வழங்கிய**

**மரபுடைத்தாயே – மரபு வழிப்பட்ட தாயாம் அருட்பெருஞ்ஜோதியே!**

**சத்தி சத்தர்கள் எலாம், சார்ந்து, எனது ஏவல்செய்**
**சித்தியை அளித்த, தெய்வ நல்தாயே**

சத்தி சத்தர் என்ற பெயர்களை வள்ளற் பெருமான் பல இடங்களில் பலமுறை வழங்குகிறார்.

சத்தி – ஆற்றல்களாகிய சத்திகள்; சத்தர் – அவ்வாற்றல்களைச் செயற்படுத்தும் அதிபர்கள். பிரபஞ்சத்தில் எண்ணிறந்த சத்திகள் உள்ளன; எண்ணிறந்த சத்தர்கள் உள்ளனர்.

*சத்திகள் பலவற்றிலும் ஐந்து சத்திகள் (பஞ்ச சத்திகள்) முதன்மையானவை. பராசத்தி, ஆதிசத்தி, ஞானசத்தி, இச்சாசத்தி, கிரியாசத்தி என்பன அவை.*

*எல்லாச் சத்திகளிலும் மேலான சத்தி பராசத்தி. பரனது சத்தி பரை. அதுவே பராசத்தி. பராசத்தியின் ஒரு சிறு கூறே ஆதிசத்தி. பராசத்தியின் ஆயிரத்தில் ஒரு கூறு ஆதிசத்தி என்று கூறுதல் மரபு.*

*அட்ட வித்யேசுவரர், அணுசதாசிவர் போன்ற சத்தர்கள் பலர். சத்தி சத்தர்களால் பிரபஞ்சத்தின் எல்லா இயக்கங்களும் காரியப்படுகின்றன (நடைபெறுகின்றன).*

**சத்தி சத்தர்கள் எலாம்** – **சத்திகள் சத்தர்கள் எல்லாரும்**

**சார்ந்து** – **என்னைச் சார்ந்து**

**எனது ஏவல் செய்** – **என்னுடைய ஏவலைச் செய்கின்ற**

**சித்தியை** – **வல்லபத்தை**

**அளித்த** – **எனக்குக் கொடுத்த**

**தெய்வ நல்தாயே** – **தெய்வமாகிய நல்ல தாயாம் அருட்பெருஞ்ஜோதியே!**

*சத்தி சத்தர்கள் அனைவரும் வள்ளலாரைச் சார்ந்து, அவர் ஏவிய பணிகளைச் செய்கிறார்கள். வள்ளலாரின் ஏவலராகச் செயற்படுகிறார்கள். அந்நிலைக்கு வள்ளலாரை அருட்பெருஞ்ஜோதி ஏற்றி அருளிற்று.*

*ஏவலில் குற்றேவல் என்று ஒன்றுண்டு. சிறுசிறு பணிகளைச் செய்ய ஏவுதல் குற்றேவல். குற்றேவல் செய்வோர் குற்றேவலர். இக்காலத்தில் கடைநிலை ஊழியர் என்றொரு பதவிப் பெயர் வழங்குகிறது. சிறிது முற்காலத்தில் சேவகர் என்ற பதவிப் பெயர் வழங்கிற்று. சத்தி சத்தர்களெல்லாம் கடவுளுக்குக் கடைநிலை ஊழியர்கள்; குற்றேவல் செய்பவர்கள். கடவுள் நிலை அறிந்து கடவுள் மயமான வள்ளலாருக்கும் சத்தி சத்தர்கள் எல்லாரும் குற்றேவல் செய்யும் ஏவலர்கள், சேவகர்கள்.*

*வள்ளலார் அவ்வளவு பெரியநிலையில் இருக்கிறார். இருக்க அருளியது அருட்பெருஞ்ஜோதி.*

**வருகின்ற ஏப்ரல் மாதம் 21ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை அருட்பெருஞ்ஜோதி அகவல் அருளிய நாள்.**

திருச்சிற்றம்பலம்

**Advertisement**

# மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வடலூர் சித்தி வளாகம் என்கின்ற மேட்டு குப்பத்தில் நடைபெறும் பசி பிணி போக்கும் திரு பணிக்கு உதவ அனுகுவீர்.

திரு. நந்தி சரவணன் ஐயா
9842679999 / 9442327059

திருவருள் துணையுடன்

BNS

# eXS Lending Library

## எக்சஸ் வாடகை நூலகம்

Wings of Wisdom

**Books for All Ages**

Unlimited Books Starts @ INR 1200/.

| Scheme | Books at a Time |
|---|---|
| Super Reader | 10 |
| Book Lover | 5 |
| Elite Reader | 4 |
| Language Reader | 3 |
| Smart Reader | 1 |

Door Delivery Available*

**HABITUAL READER**

# Pay as you take and read, like 10% to 15% on book cost of 15 days.

# % may change based on books popularity, availablity and price

# SOULFUL HOME

## Schemes starts @ INR 2400/=

| Sno | Facilities | Super | Max | Book Max | Mag Max |
|---|---|---|---|---|---|
| 1 | Books | 30 | 15 | 7 | 2 |
| 2 | Magazines | 15 | 10 | 5 | 5 |
| 3 | Scheduled Visits | 12 | 12 | 12 | 24 |
| 4 | Unscheduled Visits | 6 | 6 | 3 | 0 |

Deposit INR - 500/



## Key advantages

1. Lifetime membership @ 100% refundable deposit INR 500/=
2. Reading charges starts @10%
3. Hassle free door step service available

AYYAPPAN THANGAL 26792007 / VALASARAVAKKAM 42105700 / PORUR 42107304 / OMR 42863478 / VADAPALANI 42642491



தலை குனிந்து என்னை பார் .....
தலை நிமிர்ந்து
உன்னை நடக்க வைக்கின்றேன் – புத்தகம்

9444 408 804

Suriyaa Digital
Porur - 9677227755




அன்பு உள்ளங்களே! அறம் எனப்பட்டதே இல்வாழ்க்கை, அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை, அறம் செய விரும்பு என்பன போன்ற ஆன்றோர் வாக்கு நாம் அனைவரும் அறிந்த ஒன்றே. இவற்றை நாம் கடைபிடிக்க வேண்டும் என்று எண்ணினாலும் இன்றைய காலச் சூழ்நிலை அதை நம் வாழ்நாளில் கடைபிடிக்க விடாமல் செய்துவிடுகின்றது.

ஆனால், காலச் சூழ்நிலை கருதாது எத்தனை சிரமம் வந்தாலும் அறவழி நின்றோரையே நாம் மகாத்மாவாக, தெய்வங்களாக வணங்கி வாழ்த்துகின்றோம்.

நாயன்மார்களின் புராணத்தை படைத்த சேக்கிழார் நூலின் முதற்பகுதியாக மனுநீதிச் சக்ரவர்த்தியின் வரலாற்றை ஏன் அமைக்க வேண்டும்? ஏனென்றால், ஐந்தறிவுடைய பசுங்கன்றின் உயிரையும், ஆறறிவுள்ள தன் மகனின் உயிரையும் ஒப்பக் கருதி தீர்ப்பு வழங்கி அறத்தை நிலைநாட்டியதால்தான். அப்படி அவன் செய்ததால் மனுநீதி மன்னன் நின்ற வீதியில், எல்லாம்வல்ல இறைவனே காட்சி தந்தான் என்றால் சேக்கிழார் தன் நூலின் முதற்பகுதியாய் மன்னனின் வரலாற்றை வைத்ததில் வியப்பென்ன இருக்கிறது.

மகாத்மா காந்தி அவர்கள் சிறையில் இருந்த சமயம் அவருக்கு உதவியாளராக ஒருவர் இருந்தார். அவர் மகாத்மா விடுதலை பெறும்வரை அருந்தொண்டாற்றினார்.

ஒருசமயம் மகாத்மாவை வைத்து மாநாடு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த கூட்டத்திற்கு சிறையில் மகாத்மாவின் உதவியாளராக இருந்தவரும் வந்திருந்தார். அவரைக் கண்டதும் தன்னிடம் அழைத்து நலம் விசாரித்தார். பின்பு, “என்னைச் சிறையில் கண்ணும் கருத்துமாக பார்த்துக் கொண்ட உனக்கு நான் ஏதாவது உதவ வேண்டும். இப்போது முக்கிய அலுவலில் இருப்பதால் இரண்டு நாள் கழித்து வா” என்று கூறி அனுப்பிவிட்டார்.

ஆனால் இறுதிவரை மகாத்மாவால் அவரைச் சந்திக்க முடியவேயில்லை. இதனை ஓர் அனுபவமாகக் கொண்டு மகாத்மா தன் சுயசரிதையில் கீழ்க்கண்டவாறு எழுதினார்.

“நாம் யாருக்கேனும் உதவவேண்டும் என்று எண்ணினால் அதை அன்றே அப்போதே செய்துவிட வேண்டும். ஏனெனில் பின்பு உதவும் வாய்ப்பு நமக்க கிடைக்குமா என்பது தெரியாது”

எத்தனையோ இன்னல்களுக்கும், போராட்டங்களுக்கும் இடையே இவ்வண்ணம் அறத்தை கடைபிடித்ததால்தான் நாம் இன்றளவும் அவரை மகாத்மா என்றே அழைக்கின்றோம்.

ஏன் இந்த அறத்தை கடைபிடிக்க இவ்வளவு தீவிரம் காட்ட வேண்டும்? இதில் என்ன இருக்கின்றது? இதற்கான ஒரு சிறு ஆய்வினைக் காண்போம்.

**அறம்** என்ற சொல் **'அறு'** என்ற வினைச் சொல்லினை அடிப்படையாகக் கொண்டு பிறந்தது. இச்சொல்லுக்கு செல், வழியை உண்டாக்கு, துண்டி, வேறுபடுத்து என்ற பலவகைப் பொருள்கள் உண்டு. இத்தகைய சொல் ஆராய்ச்சியின் அடிப்படையில் அறம் என்னும் சொல்லிற்கு பின்வருமாறு விளக்கம் கூறலாம்.

மனிதன் தனக்கென்று வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே - முழுநிறை வடிவமே அறம். **''பிறவிதோறும் மனிதனைப் பற்றிக் கொண்டு வரும் தீவினையை அறுத்து எறிவதே அறம்''** என்ற ஆன்மீக விளக்கமும் இதற்கு உண்டு.

இதனை உணர்ந்தே நம் முன்னோர்கள் அறவாழ்வினை மேற்கொண்டு ஒழுகலானார்கள். இத்தகைய அறத்தினை ஏன் தீவிரமாக கடைபிடிக்க வேண்டும் என்பதற்கான புராணக் கதை ஒன்றினைக் காண்போம்.

பஞ்ச பாண்டவர்கள் முக்கியமான ஆலோசனை ஒன்றில் ஈடுபட்டிருந்தார்கள். அப்போது அதிதி ஒருவர் அங்கே வந்தார். தருமரைப் பார்த்து தர்மம் கேட்டார்.

ஆலோசனையில் மும்முரமாக இருந்த தருமர் முன்பின் யோசிக்காமல், ''நாளை வாருங்கள்... தருகிறேன்'' என்று கூறினார்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த தம்பி பீமன் சட்டென்று எழுந்தான். தனதருகில் இருந்த முரசைப் படபடவென்று அடித்தான்.

''இப்பொழுது ஏன் முரசைக் கொட்டுகிறாய்'' என்று தருமர் கேட்டார். ''அண்ணா, காலத்தை நீங்கள் வென்றுவிட்டீர்கள். அந்த வெற்றியைக் கொண்டாடத்தான் முரசு கொட்டுகிறேன்'' என்றான் பீமன்.

''என்ன, காலத்தை நான் வென்றுவிட்டேனா என்ன சொல்கிறாய்?'' என்று கேட்டார் தருமர்.

''அண்ணா, தங்களிடம் தர்மம் கேட்டுவந்த அதிதியிடம், 'நாளை வா' என்று கூறுனீர்களே! அப்படியென்றால் நாளைவரை உயிருடன் இருப்போம் என்னும் உறுதி உங்கள் மனதில் உண்டாகிவிட்டதல்லவா! இது காலத்தை வென்றதற்கு அறிகுறியல்லவா'' என்றான் பீமன்.

தவறை உணர்ந்த தருமர், உடனே அந்த அதிதியை அழைத்துவரச் செய்து அவருக்கு வேண்டிய தான தர்மங்களைச் செய்தார்.

தர்மம் செய்வதற்கு நாள், நட்சத்திரம் பார்த்துத் தள்ளிப் போடுவதைக் காட்டிலும் அன்றே செய்து முடிப்பதுதான் நற்பலனைத் தரும்.

மகாத்மாவின் அனுபவ உரையில் நாளை நமக்கு தருமம் செய்யும் வாய்ப்பு இருக்குமோ என்பதை அறிந்தோம். ஆனால், இப்புராணக் கதை, தர்மம் செய்ய நாளை நாம் உயிரோடு இருப்போமா என்பதே தெரியாது என்கிறது. ஆகவே, இன்றே அறம் செய்ய வேண்டும் என்பது தெளிவாகிறது. இக்கூற்றினை பின்வரும் நாலடியார் பாடல் உரைக்கின்றது.

**மற்றறிவாம் நல்வினை யாம் இளையம் என்னாது**
**கைத்துண்டாம் போழ்தே கரவாது அறஞ்செய்மின்!**
**முற்றியிருந்த கனியொழியத் தீ வளியால்**
**நற்காய் உதிர்தலும் உண்டு.**

அதாவது, ''பெருங்காற்று வீசும்போது பழங்கள் உதிராமல், காய் உதிர்வதும் உண்டு. அதுபோல் வயதானவர் நிலைத்திருக்க வாலிபர் இறத்தலும் உண்டு. எனவே இப்போது நாம்தான் இளைஞராக இருக்கிறோமே பின்பு பார்த்துக் கொள்ளலாம் என்று நினையாமல் பொருள் இருக்கும்போதே மறைக்காமல் அறத்தைச் செய்யுங்கள்'' என்கிறது.

அன்பு உள்ளங்களே! இனி அறத்தின் மிகவும் ஆழமான தன்மைகளை காணப்போகிறோம். இந்த உலக இயக்கம் குறிக்கோள் உடையது. குறிக்கோள் இலாது இயங்கும் எதுவும் இங்கு இல்லை. மானுட வாழ்க்கையும் குறிக்கோளுடையது.

வாழும் உயிரினம் அனைத்திற்கும் தலைமை தாங்குவது மானிடமே! மானுட வாழ்வைச் சார்ந்துதான் மற்ற உயிர்கள் வளர்கின்றன; வாழ்கின்றன. நிலம் முதலிய ஐம்பூதங்களும்கூட மானுடத்தின் மூலமே பயன்பாடுறுகின்றன. ஆதலால் மானுட வாழ்க்கை அருமையானது. மிகமிக உயர்ந்த குறிக்கோளுடையது.

அறம் என்பது செயலா, சொல்லா, எண்ணமா என்று பார்த்தால், அறம் என்பது செயலன்று; அது வாழ்தல். அறமே வாழ்வு; வாழ்வே அறம்.

மேலும், சொல்லுக்கும் செயலுக்கும் ஆதாரமாக இருப்பது எண்ணமே. எனவே ஒன்றை பற்றும் மனமும், அதை விசாரிக்கும் புத்தியும், இன்னதென்று நிச்சயிக்கும் சித்தம் ஆகிய அகநிலை உறுப்புகள் மாசு இல்லாதவைகளாக இருக்க வேண்டும். இதுவே அறம்.

ஏனெனில், அறத்தில் சிறந்தது மனத்தில் மாசின்றி இருத்தல்.
**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்**
**ஆகுல நீர பிற** என்று நம் வள்ளுவப் பெருந்தகை கூறுவது நாம் அனைவரும் அறிந்த ஒன்றே. அதற்கு நம் அந்தக்கரணத்தை அன்பில் தோயச் செய்து எல்லா உயிர்களிடத்தும் அன்புடையவராக வாழ்தல் வேண்டும். இதுவொன்றே மனதின் மாசினை அகற்றும் வழி.

இங்கு மாசு எனக் குறிக்கப்படுவது அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாசொல் என்பன. இவையாவும் நமது செயற்கை குணங்களே அன்றி இயற்கை குணம் அல்ல. எனவே இம்மாசுகளை நீக்குவதே அறம். எனினும் அறத்தினால் வரும் பயன் சற்றே ஆழமாய்ச் செல்கின்றது.

ஒவ்வொரு ஜீவனும் இவ்வுலகில் இன்பமாய் வாழவே முயல்கின்றன. ஆனால், அவ்வின்பத்தை அடையும் வழிதுறை தெரியாமல் தவிக்கின்றனர். பின்வரும் குறள் எது இன்பம் என்பதை நமக்குத் தெளிவுபடுத்துகிறது.

**அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்**
**புறத்த புகழும் இல**

என்னவெனில், அறநெறியில் வாழ்வதன் பயனாக வருவதே இன்பமாகும். அறத்தோடு பொருந்தாமல் வருவன எல்லாம் இன்பம் இல்லாதவை; புகழும் இல்லாதவை என்பதாம்.

இதை இன்னும் ஆழமாக முடிந்த முடிவாக வள்ளல் பெருமானார் வழிநின்று காண்போம்.

**தர்மம் என்பதற்குப் பொருள் ஆன்மாவின் இயற்கை. ஆன்மாவிற்கு இயற்கை குணம் தயவு. ஆன்ம இயற்கையோடு இருந்தால் சிவமாகலாம்.** ஆக, செயற்கை குணங்களாகிய அழுக்காறுகளை நீக்கி ஆன்மாவின் இயற்கை குணமாகிய தயவோடு இருந்து சிவமயமாவதே அறத்தால் வரும் இன்பம். எனவேதான் ஆன்மாவின் இயற்கைத் தன்மையாம் தயவோடு இருப்பதை இறைவழிபாடாக அமைத்தார் நம் வள்ளல் பெருமானார். அதாவது, **ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு.** இவ்விதம் வாழ்ந்து சிவானுபவம் பெறுவதே மனிதப்பிறப்பின் நோக்கமாக; லக்ஷியமாக; குறிக்கோளாக வகுத்தார்.

**உலகத்தில் மனிதப் பிறப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் இந்தப் பிறப்பினால் அடையத்தக்க ஆன்ம லாபத்தை காலமுள்ளபோதே அறிந்து அடைய வேண்டும். – திருஅருட்பா வசனபாகம்.**

திருச்சிற்றம்பலம்

# தத்துவ தாத்விகங்கள்

இந்த உலகில் மனிதப் பிறப்பெடுத்த நாம் அனைவரும் அறிவியல், கணிதம், வானியல், இயந்திரவியல் என எத்தனையோ விஷயங்களை அறிந்து கொள்ள முயற்சிக்கிறோம். அந்தந்தத் துறைகளில் அறிவு வளர்ச்சியும் பெற்றிருக்கிறோம்.

ஆனால், அறிவின் தன்மை என்ன என்பதை நாம் அறிந்திருக்கவில்லை. **அறிவு அற்றம் காக்கும் கருவி** என்பது திருவள்ளுவர் வாக்கு. அதாவது, அறிவு என்பது அழிவு வராமல் காக்கும் கருவி என்பது அவர் கருத்து. இதனை வைத்து பார்க்கும்போது நாம் இதுநாள் வரை அறியவேண்டியதை அறிவதற்கான அறிவை பெற்றிருக்க வில்லை என்பதே உண்மை. நமது திருமூலர் சித்தரும் **தன்னை அறிய தனக்கொரு கேடில்லை; தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்** என்று அருளியுள்ளார். எனவே, தன்னை அறியும் அறிவே அறிவு. இதுவே நம்மை எல்லாத் துன்பங்களிலிருந்தும் பாதுகாக்கும் என்பது துணிபு.

நம்மை அறிவதற்குமுன் நம்மை இயக்கும் தத்துவங்களை அறிதல் அவசியமாகிறது. அவற்றை அறிந்து அவற்றைக் கடந்தால்தான் நம்மைநாம் அறியமுடியும்.

## ஆத்ம தத்துவம் 24ன் வகை தொகை

**பூதங்கள் 5**

1) பிருதுவி (நிலம்)
2) அப்பு (நீர்)
3) தேயு (நெருப்பு)
4) வாயு (காற்று)
5) ஆகாயம் (வான்)

**தன் மாத்திரைகள் 5**

1) சப்தம் (ஓசை)
2) பரிசம் (ஊறு)
3) ரூபம் (ஒளி)
4) ரசம் (சுவை)
5) கந்தம் (நாற்றம்)

**ஞானேந்திரியங்கள் (அறிவுக்கருவிகள்)**

1) சுரோத்திரம் (செவி)
2) துவக்கு (மெய்)
3) சட்சு (கண்)
4) ஜிஹ்வா (நாக்கு)
5) ஆக்கிராணம் (மூக்கு)

**கன்மேந்திரியங்கள் 5 தொழிற்கருவிகள்**

1) வாக்கு (வாய்)
2) பாதம் (கால்)
3) பாணி (கை)
4) பாயுரு (அபானம்)
5) உபத்தம் (குறி)

**அந்தக்கரணங்கள் 4**

மனம், புத்தி, சித்தம், அகங்காரம். ஆக, 24 தத்துவங்கள்.

**வித்தியாதத்துவம் 7-இன் வகை தொகை**

*காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை.*

**சிவதத்துவம் 5-இன் வகை தொகை**

*சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம் சத்தி(விந்து), சிவம்(நாதம்)*

*ஆன்மதத்துவம் 24, வித்தியாதத்துவம் 7, சிவதத்துவம் 5 ஆக, தத்துவம் 36.*

*ஆன்ம தத்துவத்திற்கு* **அசுத்த தத்துவம்** *என்றும்* **போக்கிய காண்டம்** *என்றும் பெயர். வித்தியாதத்துவத்திற்கு* **சுத்தாசுத்த தத்துவம்** *என்றும்* **போசயித்திருகாண்டம்** *என்றும் பெயர். சிவதத்துவத்திற்கு* **சுத்ததத்துவம்** *என்றும்* **பிரேரககாண்டம்** *என்றும் பெயர்.*

*ஆன்மதத்துவம் - அசுத்த தத்துவம் - போக்கியகாண்டம்*

*வித்தியாதத்துவம் - சுத்தா சுத்த தத்துவம் - போசயித்திருகாண்டம்*

*சிவதத்துவம் - சுத்த தத்துவம் - பிரேரக காண்டம்*

*(சுத்தாசுத்த - சுத்தம் அசுத்தம் இரண்டும் கலந்தது)*

*ஆன்மதத்துவத்தை மலரோன் தத்துவம் என்றும் வித்தியா தத்துவத்தை மாலோன் தத்துவம் என்றும் வள்ளற்பெருமான் குறிப்பர் (நெஞ்சறிவுறுத்தல் 680-81). இஃதோர் முக்கிய குறிப்பு; இனி தாத்விகம் 60ன் வகை தொகையினைக் காண்போம்.*

**பிருதிவியின் காரியம் 5**

*மயிர், தோல், தசை, நரம்பு, எலும்பு*

**அப்புவின் காரியம் 5**

*நீர், உதிரம், மச்சை, மூளை, சுக்கிலம்*

**தேயுவின் காரியம் 5**

*ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், சோம்பல்*

**வாயுவின் காரியம் 5**

*ஓடல், நடத்தல், நிற்றல், இருத்தல், கிடத்தல்,*

**ஆகாயத்தின் காரியம் 5**

*குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் என பூதகாரியங்கள் 25.*

**வாயுக்கள் 10**

*பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிருதரன், தேவதத்தன், தனஞ்சயன்.*

**நாடிகள் 10**

*இடை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, சி(ன்)குவை, அலம்புடை, புருடன், குகு, சங்கினி.*

**அகங்காரம் 3**

*தைசத அகங்காரம், வைகாரிக அகங்காரம், பூத அகங்காரம்*

**கன்மேந்திரியங்களின் தொழில் 5**

*வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம்*

**குணங்கள் 3**

*சத்துவம், ராஜசம், தாமசம்*

**வாக்கு 4**

*சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி*

*பூதகாரியங்கள் 25, வாயுக்கள் 10, நாடிகள் 10, அகங்காரம் 3, கன்மேந்திரியங்களின் தொழில் 5, குணங்கள் 3, வாக்கு 4 ஆகத் தாத்துவிகங்கள் 60(அறுபது).*

**தத்துவம் 36 + தாத்துவிகம் 60, ஆகத் தத்துவங்கள் 96**

இத்தொண்ணூற்றாறு தத்துவங்களால்தான், அண்டமாகிய உலகமும் உலகத்துப் பொருள்களும் பிண்டமாகிய நம் உடம்பும் ஏனைய உயிரினங்களின் உடம்புகளும் ஆகிய எல்லாமே ஆகியுள்ளன.

திருச்சிற்றம்பலம்

## அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

*அன்பு உள்ளங்களே! கடந்த 10 ஆண்டுகளாக அன்பர்களின் தயவால்தான் நமது மாத இதழ் நடைபெற்று வருகின்றது. ஆனால் பெரும்பாலான அன்பர்கள் நமது மாத இதழுக்கு சந்தா செலுத்தாமலேயே உள்ளனர்.*

*இருப்பினும் இதுவொரு ஆன்மீக மாத இதழ் என்ற காரணத்தினால் அவர்களுக்கும் தவறாது அனுப்பிக்கொண்டுதான் இருக்கிறோம். இதை உணர்ந்து அன்பர்கள் நிலுவையிலுள்ள தங்கள் தொகையை தெரிந்துகொண்டு சந்தா தொகையினை செலுத்தி இம்மாத இதழ் தொடர்ந்து நடைபெற உதவுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.*

*சந்தாகால விபரம் பற்றி அறிய புத்தகத்தின் பின் அட்டையில் தங்கள் முகவரியின் கடைசி வரியினை காண்க.*

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் **8012680865**

# தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்

அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம். **தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.**

## ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை

| | |
|---|---|
| **காலை அரசு மருத்துவமனையில் கஞ்சி வார்த்தல்** | **–ரூ.2,000/–** |
| **காலை அன்னதானதிற்கு** | **–ரூ.2,500/–** |
| **மதிய சிறப்பு அன்னதானதிற்கு** | **–ரூ.8,500/–** |
| **மதிய அன்னதானதிற்கு** | **–ரூ.5,000/–** |
| **இரவு சிறப்பு அன்னதானதிற்கு** | **–ரூ.7,500/–** |
| **பௌர்ணமி சிறப்பு அன்னதானதிற்கு** | **–ரூ.15,000/–** |
| **பசு பராமரிப்பிற்கு (ஒரு நாளைக்கு)** | **–ரூ.2,500/–** |
| **அணையா தீபத்திற்கு Oil (5 இடங்களுக்கு) –15லி** | **–ரூ.1,900/–** |

**தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்**

**Please donate - Cheque / DD In favour of**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**Please donate through: HDFC Bank Ltd.,**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**A/c No. : 08761450000048 IFSC Code: HDFC0000876**

**Please send MO to:**

அருள்திரு **பாபு சாது**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை,

கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை அஞ்சல்,

திருஅண்ணாமலை – 606 604.

செல்: +91 9443489849, +91 9942776351

அன்னதானம் பற்றிய விபரங்களுக்கு:-

**+91 9487454688**

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

### சிறுவர் சிறுமியர்களுக்கான

# கோடை விடுமுறை சிறப்பு பயிற்சி முகாம்



## திருவண்ணாமலையில்

## இயற்கைச் சூழலில் 7 நாட்கள்...

**நாள்:**
**மே 2019**
**11 - 17**
**வரை**



**இடம்: வள்ளலார் சன்மார்க்க சங்கம், வாயுலிங்கம் எதிரில், திருவண்ணாமலை.**

**இந்த பயிற்சி முகாமில்...**

- நினைவாற்றல் பயிற்சி
- மனோ சக்திக்கான தியான நுட்பங்கள்
- ஒழுக்கநெறி பாடம்
- யோகாசனம்
- பிராணாயாமம்
- ஓவியப் பயிற்சி
- ஜீவகாருண்யம்
- உணவுமுறை

**போன்ற சிறப்பு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

## பெற்றோர்கள் கவனத்திற்கு...

1. பயிற்சியில் கலந்துகொள்ளும் குழந்தைகளை பெற்றோர்கள் மே 11ம் தேதி சனி இரவிற்குள் அழைத்துவந்து விட வேண்டும்.

2. 7 முதல் 13 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மட்டுமே அனுமதி.

2. யோகா செய்வதற்கும், படுப்பதற்கும் 2 பெட்ஷீட் எடுத்து வரவும்

3. குறிப்பு எடுக்க நோட்டு. பேனா எடுத்து வரவும்.

4. பெற்றோர்கள் குழந்தைகளுடன் தங்க அனுமதி இல்லை.

5. பெற்றோர்கள் மே 17 வெள்ளி காலை 8:30க்குள் வந்துவிட வேண்டும்.

**7 நாட்களும் ஆரோக்கிய உணவு & தங்குவதற்கு இடம்**
**இவற்றிற்கு நன்கொடை ரூ.3000/-**

**Bank:** HDFC Bank Ltd., **Name:** Arutperunjothi Vallalar Charitable Trust,
**A/c No.:** 08761450000048, **Branch:** Thiruvannamalai, **IFSC Code:** HDFC0000876

**முன்பதிவிற்கு: 94874 54688, 88385 40176, 73589 04057, 90475 41181.**

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly April 2019, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2017-19 Posted at Tiruvannamalai on 16th of every month,
WPP License No. TN/PMG(CCR)/WPP 582/2018-2019
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



# வடலூர் மாதப்பூசம்



**21.04.2019** – சித்திரை 08 – ஞாயிறு – திருவருட்பிரகாச வள்ளல் பெருமானார் அருட்பெருஞ்ஜோதி அகவல் அருளிய நாள்

**10.05.2019** – சித்திரை 27 – வெள்ளி

**25.05.2019** – வைகாசி 11 – சனி – வள்ளல் பெருமானார் வடலூரில் சத்திய தருமச்சாலை துவக்கிய நாள் (1867)

**07.06.2019** – வைகாசி 24 – வெள்ளிக்கிழமை

**04.07.2019** – ஆனி 18 – வியாழக்கிழமை

**31.07.2019** – ஆடி 15 – புதன்கிழமை

**28.08.2019** – ஆவணி 11 – புதன்கிழமை

**24.09.2019** – புரட்டாசி 07 – செவ்வாய்க்கிழமை

தொடர்புக்கு: **88385 40176, 63801 11475**

*அனைவரும் வருக! குருவருள் பெறுக!!*

திரு/திருமதி

Redirect to : அருள்திரு **பாபு சாது**
**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**
**552/6A,** வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை – 606 604. Cell : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: **+91 80126 80865**